**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.52/2022**
**Deposition of witness of Defendant – D.W.4(பழனியம்மாள்)**
**08.09.2025**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான், எனது கணவர் மற்றும் குழந்தை ஆகியோர் எங்கு வசித்து வருகிறோம் என்றால் விராலிமலையில் வசித்து வருகிறோம்.

2. வழக்கில் பி.வா.சா.2ஆக விசாரிக்கப்பட்ட ராமசாமி எனது கணவர் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 நோட்டில் 86 மற்றும் 87ஆம் பக்கங்களில் உள்ள விவரங்கள் அனைத்தும் ஒரே பேனா மற்றும் ஒரே மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வழக்கு பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் மனைவி ஆவார். வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் தேதி தெரியாது.

4. பி.வா.சா.ஆ.2ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் கொடுத்த பிறகுதான் எழுதப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ.2ல் 86வது பக்கத்தில் 10.09.2018ஆம் தேதிக்கு பிறகு எக்ரிமென்ட்டுக்கு ரூ.11,000/- என கண்டுள்ள தொகை 10.09.2018ஆம் தேதிக்கு பின்பு செலவிடப்பட்ட தொகை என்றால் சரிதான். மேற்படி தொகை ரூ.11,000/- பதிவு கட்டண தொகையாகும். அந்த தொகை எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்றால் பத்திர அலுவலகத்தில் வைத்து கொடுக்கப்பட்டது.

6. பி.வா.சா.ஆ.2 உண்மையான ஆவணம் அல்ல என்றும், அது வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

7. எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எனக்கும், வாதிக்கும் எவ்வித கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றும், அவருக்கு வட்டி தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

8. பி.வா.சா.ஆ.2ல் கண்ட தொகையை தவிர வேறு தொகை எதுவும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

9. பிரதிவாதி எனது அண்ணன் மனைவி என்பதால் அவர் கேட்டுக்கொண்டபடி ஆவணத்தை உற்பத்தி செய்து நானும், எனது கணவரும் பொய் சாட்சி அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

10. பி.வா.சா.ஆ.2 ல் கண்ட குறிப்புகளை வழக்கிற்காக ஒரே தேதியில் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 பக்கம் 87ல் உள்ள கையெழுத்து எனது கணவரின் கையெழுத்தாகும். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. பிரதிவாதி என்னை சாட்சி சொல்ல அழைத்தும் நான் சாட்சி சொல்ல வர மறுத்தேனா என்றால் இல்லை. பின்னர் எதற்காக அழைப்பாணை அனுப்பப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னை நம்பகமான சாட்சி என காட்டுவதற்காக செயற்கையாக அழைப்பாணை அனுப்பி சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

12. என்னை யார் என்று வாதிக்கு தெரியாது என்றும், ஆவணம் எழுதி தருமாறு என்னிடம் வாதி கேட்டதில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/—திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.